[2012 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, பல்லடம் தொகுதியில், அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய இடத்தில் பால் வரத்து அதிகமாக இருக்குமேயானால், அங்கே நம்முடைய ஆவின் நிறுவனத்தின் சார்பில் ஆய்வு செய்து, பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு சென்று, அங்கே அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

173—

கட்டட வசதி

***5036—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, அக்ராபாளையம் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆரணி தொகுதி, அக்ராபாளையம் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, கடந்த 2011–2012 ஆம் நிதியாண்டிலே, 122 கோடி ரூபாய் அளவிற்கு நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் பெற்ற நிதியிலேயிருந்து, 26.66 இலட்சம் ரூபாய் அந்த மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டு, தற்போது அங்கே அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டடப் பணி தற்போது lintel வரை முடிந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியுமா, தெரியாதா என்பது எனக்குத் தெரியவில்லை.

2012 ஏப்ரல் 26]

நான்கில் மூன்று பங்கு பணி முடிவடைந்து இருக்கிறது. எஞ்சிய பணிகள் முடிக்கப்பெற்று, இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக அந்த மருத்துவமனை பயன்பாட்டிற்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கால்நடை மருத்துவமனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்து வைத்திருப்பதைப்போல, எனது தொகுதியிலே இருக்கக்கூடிய அந்தக் கால்நடை மருத்துவமனையிலே நடைபெறும் கட்டட வேலையும் எனக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, அங்கே கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேவேளையில், அங்கு கூடுதலாக சுற்றுச் சுவரையும் கட்டித் தர வேண்டும். ஏனென்றால், தற்போது கால்நடை மருத்துவர்கள் ஊராட்சி மன்றக் கட்டடத்திலேயிருந்து மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, அந்தச் சிரமத்தைப் போக்கிட, விரைந்து அந்தக் கட்டடத்தைக் கட்டி முடிக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு ஆரணி ஒன்றியத்திலே, கீழ்நகரிலே கால்நடை மருந்தகம் இருக்கின்றது. அதற்கு அடுத்தபடியாக, போளூர் தொகுதியிலே, தச்சாம்பாடியிலே கால்நடை மருந்தகம் இருக்கின்றது. இவற்றிற்கு இடைப்பட்ட 27 கிலோ மீட்டர் தூரத்திற்குள், ஒரு கால்நடை மருந்தகம்கூட இல்லை. எனவே, இதற்கு இடைப்பட்ட பகுதியிலே, தச்சூரிலே ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தந்தால்,

அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சுமார் 5,800 மாடுகளும், சுமார் 6,000 ஆடுகளும் பயன்பெறும். எனவே, அந்தக் கால்நடை மருந்தகம் அவசியம் தேவை என்ற அடிப்படையிலே, கீழ்நகரிலே இருக்கக்கூடிய கால்நடை மருத்துவர் அவர்கள், கடந்த 5–3–2012 ஆம் தேதியன்று, 9/2012 என்ற எண்ணிட்ட கடிதத்தினை துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியிருக்கின்றார். அந்தக் கடிதத்தின்மீதும், மேலான கவனத்தைச் செலுத்தி, அங்கே ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிமுறைகளின்படி, 3,000 கால்நடைகள் இருந்தாலே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கமுடியும். 5,000–க்கும் மேலாக அங்கே கால்நடைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார். எனவே, அந்த அடிப்படையிலே, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், இப்போது துணைக் கேள்வியில் நீங்கள் கிளை நிலையம் வேண்டுமெனக் கேட்டீர்கள். ஆனால், மூலக் கேள்வி கட்டடம் சம்பந்தப்பட்டது என்றாலும்கூட, இதைக் கேட்பதற்கு நான் அனுமதித்தேன். எனவே, தொடர்புடையதாக இருந்தால் பரவாயில்லை. திடீரென ஒரு சப்ஜெக்ட்டிலிருந்து, வேறு சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள்.

அடுத்து, வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

174—

மாணவர் விடுதி

***503—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—